இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 24-11-2024

# திண்டுக்கல் சீனிவாசன் வாக்குமூலம்

அ.தி.மு.க.வில் இருப்பவர்களில் திண்டுக்கல் சீனிவாசன் அவ்வப்போது உண்மையைப் பேசி விடுவார் என்பது உலகம் அறிந்த உண்மையாகும்.

‘அம்மா 65 நாட்கள் அப்பலோவில் என்ன செய்தார்? இட்லி சாப்பிட்டார், உப்புமா சாப்பிட்டார் என்று நாங்கள் சும்மா பொய் சொன்னோம்’ என்று சொல்லி உண்மையை ஒப்புக் கொண்டவர் திண்டுக்கல் சீனிவாசன் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. இதோ அவர், இன்னொரு வாக்குமூலத்தை அவிழ்த்துள்ளார்.

**“ஜெயலலிதாவுக்கு உதவியாக வந்தவர்கள் கோடீஸ்வரர்களாகி விட்டனர். சசிகலா, தினகரன் ஆகியோர் ஜெயலலிதாவுக்கு உதவியாக வந்தவர்கள்தான். அவர்கள் ஜெயலலிதாவுடன் இருந்ததால், அவர் ஆட்சியில் பெரும் கோடீஸ்வரர்களாக மாறினர். அந்த ஊழல் பணத்தை வைத்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டியதுதானே! அதிகாரத்திற்கு ஆசைப்படலாமா?” என்று – சசிகலா, தினகரனுக்கு நாகையில் நடைபெற்ற அ.தி.மு.க. கள ஆய்வுக் கூட்டத்தில் திண்டுக்கல் சீனிவாசன் பேசி இருக்கிறார்.**

**“ஜெயலலிதா ‘Born With Silver spoon’. அவருக்கு நல்லது எது கெட்டது எது என்று எதுவும் தெரியாது. அப்படி இருந்த ஜெயலலிதா வீட்டிற்குள் சசிகலா குடும்பம் புகுந்து 1000 பேருக்கு மேல் கோடீஸ்வரர்களாக ஆகிவிட்டனர்”** என்பது திண்டுக்கல் சீனிவாசனின் ஒப்புதல் வாக்குமூலம் ஆகும்.

ஜெயலலிதா ‘Born With Silver spoon’ – என்ற ஆராய்ச்சிக்குள் நாம் இப்போது போகத் தேவையில்லை. ஆனால் அவருக்குத் தெரியாமல் சசிகலா, தினகரன் வகையறாக்கள் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை நம்புவது, ஜெயலலிதாவையே இழிவுபடுத்துவதாகும். ‘இரும்பு மனுஷி அம்மாவுக்குத் தெரியாமல் இவர்கள் எல்லாம் முறைகேடுகளைச் செய்து கொண்டிருந்தார்களா?’ என்ற கேள்வி மிகமிகச் சாதாரணக் கேள்வி ஆகும்.

**தனது வீட்டில் இருந்து கொண்டு, தன்னை வைத்து இத்தனை பேர் முறைகேடு செய்வது தெரியாமல் ஜெயலலிதா இருந்திருக்க முடியுமா? அப்படி இருந்தால், இதுவரை அவர்கள் கட்டமைத்த ஜெயலலிதா என்ற பிம்பமே காற்றடைத்த பலூன் ஆகிவிடும். பாவம், சீனிவாசன் முழு உண்மையில் 30 விழுக்காட்டை குறைத்துச் சொல்லி இருக்கிறார். ஆனால் இவை அனைத்தும் ஜெயலலிதா அறிய நடந்தவை என்பதே நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஆகும். பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா, அளித்த தீர்ப்பு இன்னமும் இருக்கிறது.**

**“ஊழலுக்கு எதிராக நீதிமன்றங்கள் மென்மையான போக்கை ஒரு போதும் கடைப்பிடிக்காது. நீங்கள் செய்திருப்பது கருணை காட்டக்கூடிய குற்றமல்ல. இது மக்களுக்கு எதிரான குற்றம். அதிகபட்சமாக 7 ஆண்டு கால சிறைவாசம் தர வேண்டும். எனினும் உங்களுடைய வயதையும், 18 ஆண்டு வழக்கின் தாமதத்தையும் கருத்தில் கொண்டு 50 சதவிகித தண்டனை வழங்க வேண்டும் என்று நினைக்கிறேன். இந்திய தண்டனைச் சட்டம் 109 இன் படி குற்றத்துக்கு உடந்தை என்பதும் குற்றமாகிறது. எனவே நான்கு பேரும் குற்றவாளிகள் என்று இந்த நீதிமன்றம் அறிவிக்கிறது. தண்டனையாக ஒவ்வொருவருக்கும் தலா நான்கு வருடங்கள் சிறைத் தண்டனை அளிக்கிறேன். முதல் குற்றவாளிக்கு அபராதத் தொகையாக 100 கோடி ரூபாய் அளிக்கிறேன்” – இதுதான் நீதிபதி குன்ஹாவின் இறுதி வரிகள்!**

இந்த வழக்கின் மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் நடந்தது. **“எந்தவிதமான குற்றவுணர்ச்சியும் இல்லாமல் மிகத் திறமையாகத் திட்டமிட்டு சொத்துக்களை இவர்கள் வாங்கிக் குவித்துள்ளார்கள். இவற்றையெல்லாம் அடுத்தடுத்து நடந்த விசாரணையில் மறைக்க முயற்சித்துள்ளார்கள். சட்டத்தின் பிடியில் இருந்து தப்புவதற்காக இப்படிச் செயல்பட்டுள்ளார்கள். எவ்வளவு பெரிய ராஜதந்திரத்துடன் இவற்றையெல்லாம் மூடி மறைத்துள்ளார்கள் என்பதை அறியும் போது அதிர்ச்சியாக இருக்கிறது. இதற்கு மேல் எங்களால் எந்த வார்த்தையையும் பயன்படுத்தத் தெரியவில்லை.**

**பணம் சம்பாதிக்கும் ஒரே குறிக்கோளுடன், அச்சம் இல்லாமல் அனைத்து மட்டங்களிலும் ஊழல் செய்துள்ளார்கள். பேராசை மட்டுமே இவர்களிடம் இருந்துள்ளது. ஆக்டோபஸ் மாதிரி அனைத்து மட்டங்களிலும் இவர்களது ஊழல் கரம் பரவியிருக்கிறது”** – என்று நீதியரசர்கள் பினாகி சந்திரகோஷ், அமிதவராய் அமர்வு தீர்ப்பளித்தது.

ஜெயலலிதாவுக்குத் தெரியாமல் இவர்கள் ஊழல் செய்திருக்க முடியுமா? உச்சநீதிமன்றம் என்ன சொன்னது தெரியுமா? “மனிதர்களை நேசிக்கும் கொடைப்பண்பு காரணமாக சசிகலாவுக்கு போயஸ் கார்டன் வீட்டில் ஜெயலலிதா இடம் கொடுக்கவில்லை. குற்ற நடவடிக்கையில் இருந்து தான் தப்பித்துக் கொள்ளவே சசிகலாவைத் தனது வீட்டில் ஜெயலலிதா வைத்துக் கொண்டார். இவர்கள் கூட்டுச் சதியால் தான் இந்த முறைகேடுகள் நடந்துள்ளன” என்று தீர்ப்பளித்தார்கள் நீதிபதிகள். எனவே ஜெயலிதாவுக்குத் தெரியாமல் நடந்தது என்பதெல்லாம் கப்சா கதைகள். ‘இட்லி சாப்பிட்டார், உப்புமா சாப்பிட்டார்’ என்பது போன்ற பூச்சுற்றல்கள்தான்.

**ஜெயலலிதா ‘அறிய’ நடந்தவையே இவை. எனவே இன்று பழனி – பன்னீர் – சசி – டி.டி.வி. நாடகங்கள் அனைத்தும் பிரிப்பதில் ஏற்பட்ட மோதலே தவிர வேறல்ல!**

**திண்டுக்கல் சீனிவாசன் இன்னும் சில மாதங்கள் கழித்து மேலும் சில உண்மைகளைச் சொல்வார், ஒப்புக் கொள்வார் என்று நாம் எதிர்பார்க்கலாம் தானே?!**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.11.2024) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தால் முதற்கட்டமாக 18.18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கு. செல்வப்பெருந்தகை, எஸ்.ஆர். ராஜா, இ. கருணாநிதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் அதுல் ஆனந்த், சிட்கோ முதன்மைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆ. கார்த்திக், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.11.2024) திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் 330 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள மாபெரும் டைடல் பூங்காவை திறந்து வைத்து, M/s. Webberax Solutions Pvt. Ltd., M/s. Dotnix Technologies LLP ஆகிய நிறுவனங்களுக்கு அப்பூங்காவில் தள ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார். இவ்விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ. கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், எஸ். சந்திரன், வி.ஜி. ராஜேந்திரன், அ. கிருஷ்ணசாமி, கே. கணபதி, ஜோசப் சாமுவேல், எஸ். சுதர்சனம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த. பிரபுசங்கர், ஆவடி மாநகராட்சி ஆணையர் எஸ். கந்தசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் பிறந்தநாளையொட்டி – ஆட்டோ, கார், கனரக வாகன நிறுத்தங்களில்

# கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் தமிழகம் முழுதும் நலத்திட்டங்கள் வழங்கல்!

## டி.எம்.கதிர்ஆனந்த் தலைமையில் கூட்டம்! அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

*சென்னை, நவ.24-*

22.11.2024 வெள்ளி அன்று கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மாநில துணை செயலாளர்கள் மருத்துவர் வி. முத்துராஜன், எம்.எல்.ஏ., கே.தினகரன், மருத்துவர் ஆர்.சி.எம். விஷ்ணு பிரபு, ஏ.ஆர்.டி.உதயசூரியன், எம்.சிவராஜ், ஏ.கே.பூபதி, எஸ். செல்லதுரை, எஸ்.ராம்குமார், தங்கம், ஸ்ரீதர் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள். இறுதியாக ஏ.ஆர்.டி.உதயசூரியன் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை மாநில இளைஞரணி செயலாளர் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, தமிழ் நாட்டின் துணை முதல்வராக தேர்ந்தெடுத்த தமிழக முதல்வர், கழக தலைவர், தளபதியார் அவர்களுக்கு திமுக மாநில ஓட்டுநர் அணி சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டின் துணை முதல்வர், திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை, இளைஞரணியின் மாநிலச் செயலாளர், கழக சொற்பொழிவாளர்கள் படைவரிசைக்கு, அடுத்த தலைமுறையை உருவாக்கும் தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் நவம்பர் 27 அன்று சிறப்பாக கொண்டாடும் வகையில், திமுக அமைப்புசாரா ஓட்டுனர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் உள்ள அமைப்புசாரா ஓட்டுநர்கள் பணிபுரியும்வாகன நிறுத்தங்களில் (ஆட்டோ, கார், கனரக வாகனங்கள் உள்ளிட்ட வாகனங்கள் நிறுத்தும் இடங்கள்) ஒலிபெருக்கி வைத்து, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கிடவும், கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கி, ஏழை எளியோருக்கு அன்னதானம், பள்ளி குழந்தைகளுக்கு இலவச நோட்டு புத்தகம், அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கல் உள்ளிட்ட நல உதவி வழங்கி சிறப்பாக கொண்டாடி, அதன் விவரத்தை மாநில தலைமைக்கும், அன்பகத்திற்கும் அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகளை இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்வதுடன்; மாநில துணைச் செயலாளர்கள், தங்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களுக்கான, நமது அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை உடனடியாக தொடர்பு கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்யுமாறு, இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

கனிவான சிந்தனையுடன் திட்டங்களை தீட்டும் கருணை வடிவான திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதல்வரின் 3/4 ஆண்டு கால ஆட்சியில் இந்திய திருநாடு மட்டுமல்லாமல், உலகமே பாராட்டும் வகையில் கொண்டுவரப்பட்டு செயல்படுத்தி வரும் மாதந்தோறும் குடும்ப பெண்களுக்கு வழங்கி வரும் ரூ.1000 கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்.

தினமும் வேலைக்குச் செல்லும் பெண்களின் செலவை குறைக்கும் வகையில் விடியல் பயணம் திட்டம்.

பள்ளிக்கு வரும் 1 முதல் 5 ம் வகுப்பு வரையிலான பிள்ளைகளின் பசிப்பிணியை போக்கிட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

கல்லூரிக்கு வரும் மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமை பெண் திட்டம்.

கல்லூரிக்கு வரும் மாணவர்களுக்கும் மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம்.

நம்மைக்காக்கும் 48 மணி நேர திட்டம்.

10 இலட்சம் கோடிக்கான தொழில் முதலீடுகள் திட்டம்.

2 இலட்சம் விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் என பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியதன் மூலம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் தமிழ்நாடு என அனைத்து பொருளாதார நிபுணர்களும், புள்ளியல் துறை அறிஞர்களும் பாராட்டுகிற ஆட்சியை வழங்கி வரும், திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை முதல்வர் தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் தனது நெஞ்சார்ந்த பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

நாட்டில் உள்ள தொழிலாளர் நலச்சட்டங்கள் மூலம் பயனடைய முடியாத அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கும், நலவாரியம் மூலம் கிடைக்கும் பணப்பலன்கள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை பெற்றுத் தந்திட ‘திமுக அமைப்பு சாரா ஓட்டுநர்கள்” என்கிற அமைப்பை உருவாக்கி பல லட்சம் ஓட்டுநர்கள் பயனடைய செய்த திராவிட மாடல் நாயகர் முதல்வருக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னெடுப்பில், தி.மு.க. மகளிரணி சார்பில் நடைபெற்றுவரும் வினாடி வினா போட்டியின் அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் (22.11.2024 – வெள்ளிக்கிழமை) சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. இதில், 18 வயதுக்குட்பட்டோர் பிரிவில் சென்னை, சேலம், திருப்பத்தூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, சிவகங்கை, கன்னியாகுமரி, மதுரை, கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு உள்ளிட்ட அணிகளும், 18 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில் மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், சென்னை, கோயம்புத்தூர், கரூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவாரூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த அணிகளும் பங்கேற்றனர். இதில், வெற்றிபெற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள இறுதிப்போட்டிக்கு முன்னேறிய அணிகளுக்கு பாராட்டுக்களை தெரிவித்தார். தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள் தங்கம் தென்னரசு, கீதா ஜீவன், அனிதா இராதாகிருஷ்ணன், கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, தங்க தமிழ் செல்வன், மாவட்ட கழகச் செயலாளர்கள் இரா.ஆவுடையப்பன், டி.பி.எம். மைதீன்கான், ஜெயபாலன், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, ராஜா, மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மகளிரணி தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் ஆணையத் தலைவர் குமரி விஜயகுமார், மகளிரணி சமூக வலைதளப் பொறுப்பாளர்கள் ரத்னா லோகேஸ்வரன், யாழினி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.